# இயல் 3 புலி தங்கிய குகை

1. தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக,

'சிறு அளவிலான எம் வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு, ஏதும் அறியாதவள்போல நீ "உன் மகன் எங்கே?" என என்னைக் கேட்கிறாய். அவன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் புலி தங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன் இங்கில்லை எனில் போர்க்களத்தில் இருக்கக்கூடும், போய்க் காண்பாயாக' என்று தம் மசுன் குறித்துத் தாய் கூறினாள்.

2. புறநானூறு குறிப்பு எழுதுக.

புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் புறநானூறு என்று அழைக்கப்படுகிறது. புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் பண்டைக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, நாகரிகம், பண்பாடு, வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூலாக விளங்குகிறது.

3. சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.

ஔவையார்
நச்செள்ளையார்
வெள்ளி வீதியார்
காமக்கண்ணியார்
காவற்பெண்டு
ஆதிமந்தியார்
பெருங்கோப்பெண்டு
பொன்முடியார்
காக்கைப் பாடினியார்
ஒக்கூர் மாசாத்தியார் - போன்றோர் சங்க காலப் பெண்பாற் புலவர்கள் ஆவர்.

4. பண்டைக்காலப் போர்க்கருவிகள் சிலவற்றைப் படம் வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுக.